செ.வெ.எண்: 62/2021 நாள்: 27.08.2021

# TNPSC தேர்விற்கு தயாராகிறவர்கள் மேற்படி இலவச பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தங்கள் பெயரை 9499055944 அல்லது 0421-2999152 என்ற அலுவலக எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்து பயன்பெறுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

திருப்பூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் தற்போது TNPSC (Group - 2) தேர்விற்கான வகுப்புகள் தொடங்கப்பட்டு கொரோணா காரணமாக இணையவழி நடைபெற்று வந்த நிலையில் மேற்படி வகுப்புகள் 01.09.2021 முதல் நேரடி வகுப்புகளாக மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 4 வது தளத்தில் அறை எண்.439-ல் உள்ள வகுப்பறையில் நடைபெற உள்ளது.

மேலும் மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தும் Constable (General duty) in border police(BSF), Central Industrial Security Force (CISF), Indo Tibetan Border Police (ITBP) உள்ளிட்ட 25,271 பணிக்காலியிடங்களுக்கான தேர்வு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்விற்கு https://ssc.nic.in என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி தேதி 31.08.2021. இத்தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் 06.09.2021 அன்று தொடங்கப்பட உள்ளது.

இத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ளவர்கள் மற்றும் TNPSC தேர்விற்கு தயாராகிறவர்கள் மேற்படி இலவச பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில தங்கள் பெயரை 9499055944 அல்லது 0421-2999152 என்ற அலுவலக எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்து பயன்பெறுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**